24-12-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 03.04.97

பழைய சமஸ்காரங்களை அழித்துவிட்டு தன்னுடைய உண்மையான சமஸ்காரத்தை தாரணை செய்யக்கூடிய எவரெடி ஆகுங்கள்

இன்று பாப்தாதா தன்னுடைய நாலாபுறங்களிலும் உள்ள விஷ்வத்தினுடைய தந்தையின் அன்பில் லவ்லீன் (மூழ்கியிருக்கும்) ஆகியிருக்கும் மற்றும் லக்கி (அதிர்ஷ்டசாலி) குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். தேவதா சொரூபத்தில், தர்ம தலைவர்கள் என்ற ரூபத்தில், மகாத்மாக்கள் என்ற ரூபத்தில், கோடீஸ்வர ஆத்மாக்கள் என்ற ரூபத்தில் என்னுடைய குழந்தை கள் நிகழ்காலத்தில் அந்தளவு மகானாக இருக் கின்றார்கள் என்று ஒவ்வொரு குழந்தையினுடைய பாக்கியத்தைப் பார்த்து தந்தைக்கும் பெருமிதமாக உள்ளது. பிராமணர்களாகிய உங்களுடைய பாக்கியம் எந்தளவு உள்ளதோ, அந்தளவு பாக்கியம் வேறு எவருக்கும் இல்லை. தன்னுடைய அப்பேற்பட்ட சிரேஷ்டமான பாக்கியத்தை சதா நினைவில் வைத்துள்ளீர்களா? ஆஹா! பாக்கியத்தை உருவாக்கும் வள்ளலாகிய தந்தை மற்றும் ஆஹா! சிரேஷ்ட ஆத்மாவாகிய எனது பாக்கியம்! என்ற இந்த எல்லையற்ற பாடலை சதா மனதில் பாடிக் கொண்டே இருக்கின்றீர்கள். இந்த பாக்கியத்தினுடைய பாடல் சதா தானாக இசைத்துக் கொண்டே இருக்கின்றதா? தந்தை குழந்தைகளைப் பார்த்து பார்த்து சதா மகிழ்ச்சி அடைகின்றார். குழந்தைகளும் மகிழ்ச்சி அடைகின்றார்கள், ஆனால், சில நேரங்களில் இடை இடையில் தன்னுடைய பாக்கியத்தை எமர்ஜ் (வெளிக் கொணர்வது) செய்வதற்கு பதிலாக மெர்ஜ் செய்துவிடுகின்றார்கள் (அமிழ்த்திவிடு கின்றார்கள்). குழந்தைகளிடத்தில் அவர்களது சௌபாக்கியத்தின் போதை, நம்பிக்கை மெர்ஜ் ஆகிவிடுகிறது என்பதை எப்பொழுது தந்தை பார்க்கின்றாரோ, அப்பொழுது என்ன கூறுவார்? நாடகம். ஆனால், பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் எப்பொழுதுமே பாக்கியத்தின் நினைவு சொரூபத்தில் பார்ப்பதற்கு விரும்புகின்றார்கள். நீங்கள் அனைவரும் கூட இதையே விரும்பு கின்றீர்கள், ஆனால் . . . என்பது இடையில் வந்துவிடுகிறது. யாரிடம் கேட்டாலும், நான் தந்தைக்கு சமமாக ஆகியே தீரவேண்டும் என்பதையே இலட்சியமாக வைத்து நடந்துகொண்டு இருக் கின்றேன் என்று அனைத்து குழந்தைகளும் கூறுவார்கள். இலட்சியம் மிகவும் நன்றாக உள்ளது. எப்பொழுது இலட்சியம் சிரேஷ்டமாக உள்ளதோ, மிகவும் நல்லதாக உள்ளதோ, பிறகு, சில நேரம் எமர்ஜ் ரூபமாகவும், சில நேரம் மெர்ஜ் ரூபமாகவும் ஆகுவது ஏன்? காரணம் என்ன? பாப்தாதாவிடம் அவ்வளவு நல்ல நல்ல வாக்குறுதிகள் அளிக்கின்றார்கள், உரையாடலும் செய்கின்றார்கள், பிறகும் இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் வித்தியாசம் ஏன்? பாப்தாதா ரிசல்ட்டில் காரணம் என்ன என்பதை பார்த்தார்கள். அதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள், புதிய விசயம் அல்ல, பிறகும் பாப்தாதா ரிவைஸ் (திரும்ப) செய்கின்றார்கள்.

பாப்தாதா மூன்று விசயங்களைப் பார்த்தார்கள் - முதலாவது சிந்தனை, சங்கல்பம் செய்வது, இரண்டாவது பேச்சு, வர்ணனை செய்வது மற்றும் மூன்றாவது கர்மம், நடைமுறை அனுபவத்தில் மற்றும் நடத்தையில் கொண்டு

வருவது, கர்மத்தில் கொண்டு வருவது. இந்த மூன்றினுடைய சமநிலை குறைவாக உள்ளது. எப்பொழுது சமநிலை இருக்குமோ, அப்பொழுது நம்பிக்கை மற்றும் போதை எமர்ஜ் ஆகிறது, மேலும், எப்பொழுது சமநிலை குறைகிறதோ, அப்பொழுது நம்பிக்கை மற்றும் போதை மெர்ஜ் ஆகிவிடுகிறது. முடிவில் (ரிசல்ட்டில்) பார்க்கப்பட்டதாவது, சிந்திக்கும் வேகம் மிகவும் நன்றாகவும் உள்ளது மற்றும் விரைவாகவும் உள்ளது. பேச்சில் வேகம் மற்றும் போதை, இதுவும் 75 சதவிகிதம் சரியாக உள்ளது. பேச்சில் பெரும்பான்மையானோர் புத்திசாலி யாகவும் இருக்கின்றார்கள், ஆனால், நடைமுறையில் நடத்தையில் கொண்டு வருவதில் மொத்த மதிப் பெண்கள் குறைவாக உள்ளது. இரண்டு விசயங்களில் சரியாக உள்ளது, ஆனால், மூன்றாவது விசயத்தில் மிகவும் குறைவாக உள்ளது. காரணம்? எப்பொழுது சங்கல்பமும் நன்றாக உள்ளது, பேச்சும் மிகவும் அழகாக உள்ளது, பிறகு, நடைமுறையில் குறையிருப்பது ஏன்? காரணம் என்ன, அறிவீர்களா? ஆம் அல்லது இல்லை என்று சொல்லுங்கள். மிகவும் நன்றாக அறிந்திருக்கின்றீர்கள். ஒருவேளை, யாருக்கேனும் இந்தத் தலைப்பில் சொற்பொழிவாற்றுங்கள் அல்லது வகுப்பு எடுங்கள் என்று கூறினால் எவ்வளவு நன்றாக வகுப்பு எடுப்பீர்கள்! மேலும், மிகுந்த நம்பிக்கை, போதை, பெருமிதத்தோடு சொற்பொழிவும் ஆற்றுவீர்கள், வகுப்பும் எடுப்பீர்கள், எடுக்கின்றீர்கள். வகுப்புகளில் என்னென்ன சொல்கின்றீர்கள் என்று பாப்தாதா அனைவருடைய வகுப்புகளையும் கேட்கின்றார் கள். ஆஹா! ஆஹா! குழந்தைகளே ஆஹா! என்று புன்னகை செய்கின்றார்கள்.

மூல விசயம் என்னவென்றால், இது திருப்புதல் பாடம் (ரிவைஸ் கோர்ஸ்) நடந்து கொண்டிருக்கிறது என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கின்றார்கள். காரணம் ஒன்று தான், அதிகம் கிடையாது, ஒரே ஒரு காரணம் தான் என்று தந்தை கூறுகின்றார். மேலும், காரணத்தை நிவாரணம் செய்வது கடினமும் அல்ல, மிகவும் சுலபமானது என்று பாப்தாதா புரிந்திருக் கின்றார்கள். ஆனால், சுலபமானதை கடினம் ஆக்கிவிடுகின்றார்கள். கடினமானது அல்ல, ஆக்கிவிடு கின்றார்கள், ஏன்? போதை மெர்ஜ் ஆகிவிடுகின்றது. ஒரே ஒரு காரணம் தான். சக்திகளைப் பற்றியோ, குணங்களைப் பற்றியோ, தாரணைக்கான விசயங்கள் என்னவெல்லாம் கேட்கின்றீர் களோ, சொல்கின்றீர்களோ, மிகவும் நல்ல நல்ல தாரணைக்கான விசயங்களை சொல்கின்றீர்கள், அவ்வளவு நன்றாக சொல்கின்றீர்கள், அதைக் கேட்பவர்கள், அது அஞ்ஞானியோ, ஞானியோ, அதைக் கேட்டு மிகவும் நன்றாக உள்ளது, மிகவும் நன்றாக உள்ளது என்று கூறி நன்றாக கை தட்டுகின்றார்கள். மிகவும் நன்றாக உள்ளது என்று சொன்னார்கள். ஆனால், எத்தனை முறை ஆனால் வந்துவிட்டது? இந்த ஆனால் தான் தடை ஏற்படுத்துகிறது. ஆனால் என்ற வார்த்தை முடிவடைய வேண்டும், அதாவது தந்தைக்கு சமமாக அருகாமையில் வர வேண்டும் மற்றும் தந்தைக்கு அருகாமையில் வருவது என்றால் சமயத்தை அருகாமையில் கொண்டு வருவது என்பதாகும். ஆனால், இப்பொழுது வரை ஆனால் என்ற வார்த்தையை சொல்ல வேண்டியதாக உள்ளது. தந்தைக்குப் பிடிக்கவில்லை, ஆனால் சொல்ல வேண்டியதாக உள்ளது. காரணம் என்ன? என்னவெல்லாம் சொல்கின்றீர்களோ, தாரணையும் செய்கின்றீர்கள், தாரணை என்ற ரூபத்தில் தாரணை செய்கின்றீர்கள். மேலும், சிலவற்றின் தாரணை கொஞ்ச சமயமும், சிலவற்றின் தாரணை அதிக சமயமும் எடுக்கின்றது, ஆனால், தாரணை நடைமுறையில் சதா அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். அதற்கான முக்கியமான

விசயம் என்னவென்றால், எவ்வாறு துவாபரயுகத்தில் இருந்து இறுதிப் பிறவி வரை என்னவெல்லாம் அவகுணங்கள் மற்றும் பலவீனங்கள் உள்ளனவோ, அவை சமஸ்காரமாக தாரணை ஆகிவிட்டது மற்றும் சமஸ்காரமான காரணத்தினால் (அதை வெளிப்படுத்துவதற்கு) கடினமாக உழைக்க வேண்டியதில்லை. விடவும் விரும்புகின்றார்கள், பிடிக்கவும் இல்லை, பிறகும் கூட என்ன செய்வது, என்னுடைய சமஸ்காரம் அவ்வாறு உள்ளது, நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம், எனது சமஸ்காரம் அவ்வாறு உள்ளது என்று கூறுகின்றனர். சமஸ்காரம் உருவானது எப்படி? உருவாக்கியதால் தானே உருவானது! துவாபர யுகத்தில் இருந்து இந்த தலைகீழான சமஸ்காரம் உருவாகிவிட்டது, அதன் மூலம் கட்டாயப் படுத்தப்பட்டு நீங்கள் சில சமயம் அதற்கு வசமாகியும் விடுகின்றீர்கள், பிறகும் என்ன செய்வது, என்னுடைய சமஸ்காரம் அது என்று கூறுகின்றீர்கள். எனவே, சமஸ்காரமானது சகஜமாக, விரும்பாமலேயே நடைமுறையில் (செயலில்) வந்துவிடுகின்றது அல்லவா! யாருக்காவது கோபம் வருகிறது, கொஞ்ச நேரத்திற்குப் பிறகு இது என்னுடைய சமஸ்காரம், நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்கின்றார்கள். கோபத்தை சமஸ்காரமாக ஆக்கியிருக்கின்றார்கள், அவகுணத்தை சமஸ்காரமாக ஆக்கியிருக்கின்றார்கள், ஆனால், குணங்களை சமஸ்காரமாக ஏன் ஆக்கவில்லை? எவ்வாறு கோபம் என்பது அஞ்ஞானத்தின் சக்தியோ, அதுபோல் சாந்தி என்பது ஞானத்தின் சக்தியாகும். பொறுமை என்பது சக்தி ஆகும். அஞ்ஞானத்தின் சக்தியான கோபத்தை மிக நல்ல முறையில் சமஸ்காரமாக ஆக்கியிருக் கிறீர்கள் மற்றும் பயன்படுத்திக் கொண்டும் இருக்கின்றீர்கள், பிறகு, மன்னிப்பும் கேட்டுக்கொண்டே இருக்கின்றீர்கள். மன்னித்து விடுங்கள், இதற்குப் பிறகு இவ்வாறு நடக்காது என்று கூறுகின்றீர்கள். ஆனால், அதற்குப் பின்னர் அதிகமாகி விடுகிறது. காரணம்? ஏனென்றால், சமஸ்காரமாக ஆக்கிவிட்டீர்கள். ஆகையினால், பாப்தாதா ஒரு விசயத்தை குழந்தைகளுக்கு அடிக்கடி சொல்கின்றார்கள் - இப்பொழுது ஒவ்வொரு குணத்தை, ஒவ்வொரு ஞானத்தின் விசயத்தை சமஸ்காரமாக ஆக்குங்கள்.

பிராமண ஆத்மாக்களுடைய உண்மையான சமஸ்காரம் எது? கோபமா அல்லது பொறுமையா? எது? பொறுமை சக்தி, சாந்தியின் சக்தி, இவை தான் உண்மையான சமஸ்காரம் அல்லவா! அவ குணங்களை சகஜமாகவே சமஸ்காரமாக ஆக்கிவிட்டீர்கள், இடித்து இடித்து உள்ளே போட்டு விட்டீர்கள், ஆகையினாலேயே, அது நீங்கள் விரும்பாமலேயே வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அதுபோல் ஒவ்வொரு குணத்தையும் உள்ளுக்குள் இடித்து இடித்து சமஸ்காரம் ஆக்குங்கள். என்னுடைய உண்மையான சமஸ்காரம் எது? இதை சதா நினைவில் வையுங்கள். அந்த இராவணனுடைய சொத்தை சமஸ்காரமாக ஆக்கிவிட்டீர்கள். பிறர் பொருளை தனதாக்கி விட்டீர்கள். இப்பொழுது தந்தையின் பொக்கிஷத்தை தனதாக ஆக்குங்கள். இராவணனுடைய பொருளை பத்திரமாக வைத்திருக்கிறீர்கள் மற்றும் தந்தையின் பொருளை தொலைத்து விடு கிறீர்கள், ஏன்? இராவணனைப் பிடிக்கிறதா? அல்லது தந்தையைப் பிடிக்கிறதா? அனைவரும் தந்தையைப் பிடிக்கிறது என்றே சொல்வீர்கள், இதை மனதார சொல்கின்றீர்கள் அல்லவா? ஆனால், யாரைப் பிடிக்கிறதோ, அவர்களுடைய விசயம் நம்பிக்கை என்ற மையினால் உள்ளத்தில் பதிந்துவிடுகிறது. சிலர் இராவணனுடைய

சமஸ்காரத்திற்கு வசமாகி இருக்கின்றார்கள், பிறகும் கூட பாபா, உங்கள் மீது மிகுந்த அன்பு உள்ளது., மிகுந்த அன்பு உள்ளது என்று கூறிக் கொண்டே இருக்கின்றார்கள். தந்தை கேட்கின்றார் - எவ்வளவு அன்பு உள்ளது? ஆகாயத்தை விட அதிகமாக உள்ளது என்று கூறுகின்றார்கள். அதைக் கேட்டு தந்தை எவ்வளவு வெகுளியான குழந்தைகள் என்று மகிழ்ச்சியும் அடைகின்றார். பிறகும் தந்தை கூறுகின்றார் - அனைத்து குழந்தைகளிடமும் தந்தையின் வாக்குறுதி என்ன வென்றால் - ஒருமுறையேனும் மேரா பாபா (என்னுடைய பாபா) என்று சொல்கின்றீர்கள், பிறகு, இடை இடையில் மறந்தும் விடுகின்றீர்கள், ஆனால், ஒருமுறை யேனும் உள்ளத்தில் இருந்து என்னுடைய பாபா என்று கூறினீர்கள் என்றால், நீங்கள் யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும் என்னுடையவர்கள் ஆவீர்கள் என்று தந்தையும் கூறுகின்றார். ஊர்வலத்தில் ஒருவராக வராமல் மணமகளாகி வரவேண்டும் என்பதை மட்டும் தந்தை விரும்புகின்றார். இதைக் கேட்டவுடன் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றீர்கள். தன் மீது சிரிப்பும் வந்துகொண்டிருக்கிறது.

இப்பொழுது கேட்கும்பொழுது தனக்குத் தானே சிரிக்கின்றீர்கள் அல்லவா! தனக்குத் தானே சிரிப்பு வருகின்றது, மேலும், எப்பொழுது ஆவேசத்தில் வருகின்றீர்களோ, அப்பொழுது சிவப்பாகி, வெளிறிப் போய்விடு கின்றீர்கள். ஆனால், குழந்தைகளிடத்தில் ஒரு விசேஷத்தன்மை நன்றாக உள்ளது என்பதை தந்தை ரிசல்ட்டில் பார்த்தார், அது என்ன? தூய்மையாக இருப்பது, இதற்காக எவ்வளவு பொறுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது, எவ்வளவு எதிர்ப்பு செய்பவர்கள் முன்னால் வந்திருக்கிறார்கள், ஆனால், இந்த விசயத்தில் 75 சதவிகிதம் நன்றாக இருக்கின்றீர்கள். சிலர் வீண் பேச்சு பேசுகின்றார்கள், ஆனால், பிறகும் கூட 75 சதவிகிதம் இந்த விசயத்தில் தேர்ச்சி பெற்று காட்டியிருக்கின்றார்கள். இப்பொழுது இதற்குப் பிறகு இரண்டாவது பாடம் என்ன வருகின்றது? கோபம். தேக உணர்வு என்பது மொத்தமாக இருப்பது. ஆனால், கோபம் என்ற பாடத்தில் மிகவும் குறைவானவர்களே தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள் என்பது பார்க்கப்பட்டது. கோபம் ஒன்றும் விகாரம் அல்ல, இது ஆயுதம் ஆகும், விகாரம் அல்ல என்று நினைக்கின்றார்கள். ஆனால், கோபம் என்பது ஞான சொரூப ஆத்மாக்களின் மகா எதிரி ஆகும். ஏனெனில், கோபமானது அனேக ஆத்மாக்களின் சம்பந்தம், தொடர்பில் வரும்பொழுது வெளிப்படுகிறது. மேலும், கோபத்தைப் பார்த்து தந்தையின் பெயருக்கு மிகுந்த நிந்தனை ஏற்படுகிறது. சொல்பவர்கள் - பார்த்தீர்களா ஞான சொரூப ஆத்மாக்களை என்று கூறுகின்றார்கள். கோபத்திற்கு பல ரூபங்கள் உள்ளன. முதலாவதோ மகான் ரூபம், அதை நீங்கள் நன்றாக அறிந்திருக்கின்றீர்கள், இவர் கோபப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது தெரிந்துவிடுகிறது. இரண்டாவது கோபத்தினுடைய சூட்சும சொரூப மாக உள்ளத்தில் பொறாமை, துவேசம், வெறுப்பு ஏற்படுகிறது. இந்த சொரூபத்தில் சத்தமாகப் பேசுவதோ அல்லது வெளிப்படையாகவோ எதுவும் தெரியாது, ஆனால், எவ்வாறு வெளியில் கோபம் தெரிகிறதோ, அப்பொழுது கோபம் நெருப்பு போன்று உள்ளது அல்லவா, அவர்கள் தானும் எரிந்து கொண்டு இருக்கின்றார்கள் மற்றும் பிறரையும் எரிக்கின்றார்கள். அவ்வாறு பொறாமை, துவேசம், வெறுப்பு ஆகிய இவை யாருக்குள் உள்ளனவோ, அவர்கள் இந்த அக்னியினால் உள்ளுக்குள்ளேயே எரிந்து கொண்டு இருப்பார்கள். வெளியில் சிவப்பாகி, வெளிறி இருக்க

மாட்டார்கள், சிவப்பாகி, வெளிறியிருப்பது கூட சரியே, ஆனால், அவர்கள் கறுப்பாகி விடுகின்றார் கள். மூன்றாவது கோபத்தினுடைய சாமர்த்தியமான ரூபமும் உள்ளது. அது என்ன? சில நேரங்களில் சீரியஸாக இருக்க வேண்டியதாக உள்ளது, சில நேரங்களில், சில நன்மைகளுக்காக சட்டத்தை எடுக்க வேண்டியதாக உள்ளது என்று நினைக்கின்றார்கள் அல்லது சொல்லும்போது சொல்கின்றார்கள். இப்பொழுது நன்மை உள்ளதா அல்லது இல்லையா? என்பதை தன்னிடத்தில் கேளுங்கள். பாப்தாதா எவருக்கும் கூட தன்னுடைய கையில் சட்டத்தை எடுப்பதற்கான அனுமதி கொடுக்கவில்லை. கோபம் கொள்ளாதீர்கள், ஆனால், சட்டத்தை கையில் எடுங்கள் என்று ஏதாவது முரளியில் சொல்லியிருக்கின்றாரா? சட்டத்தை எடுப்பவர்களின் உள்ளத்தில் அதே கோபத்தின் அம்சம் உள்ளது. யார் நிமித்த ஆத்மாக்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் கூட சட்டத்தை எடுப்பதில்லை, ஆனால், அவர்கள் சட்டத்தை ரிவைஸ் செய்ய வேண்டியதாக உள்ளது. சட்டத்தை எவரும் எடுக்க முடியாது, ஆனால், நிமித்தமாகி இருக்கின்றார்கள், ஆதலால், தந்தை மூலம் உருவாக்கப்பட்ட சட்டத்தை ரிவைஸ் செய்ய வேண்டியதாக உள்ளது. நிமித்தம் ஆகியிருப்பவர் களுக்கு இந்த அனுமதி உள்ளது, அனைவருக்கும் கிடையாது.

இன்று பாப்தாதா அதிகாரப்பூர்வமாக கல்வி புகட்டிக்கொண்டு இருக்கின்றார்கள், அதை அன்போடு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், பாப்தாதா, குழந்தைகளால் எழுதப்பட்டிருக்கும், செய்யப்பட்டிருக்கும் வாக்குறுதி களைப் பார்த்து, கேட்டு புன்னகைத்துக் கொண்டு இருக்கின்றார் கள். ஒவ்வொரு குணத்தையும் உண்மையான சமஸ்காரம் ஆக்குங்கள் என்று இப்பொழுது பாப்தாதா என்ன சொன்னார்களோ, அதற்கு அடிக்கோடிட்டீர்களா? சாந்த சொரூபத்தில் இருப்பது, பொறுமைசாலியாக ஆகுவது என்பது என்னுடைய சமஸ்காரம் ஆகிவிட்டது என்று இப்பொழு திலிருந்து சொல்ல வேண்டும். பிறகு, பாப்தாதா எப்பொழுது சந்திப்பதற்காக வருவார்களோ, அப்பொழுது, இந்த 5, 6 மாதங்களில், இதை தன்னுடைய உண்மையான சமஸ்காரம் ஆக்கிக் கொண்டு பாப்தாதா விற்கு முன்னால் காண்பிக்க வேண்டும். கோபத்தின் புகார் நிறைய வருகிறது. சிறியதாக, பெரியதாக, வெவ்வேறு ரூபத்தில் கோபப்படுகின்றார்கள். இப்பொழுது பாப்தாதா அதிகமாக வெளிப்படுத்தவில்லை, ஆனால், கதைகளோ மிகவும் கேளிக்கையான கதைகள் உள்ளன. ஆகையினால், இன்றிலிருந்து கோபத்தை என்ன செய்யப் போகின்றீர்கள்? விடை கொடுப்பீர்களா? (அனைவரும் கை தட்டினார்கள்) பாருங்கள், கை தட்டுவது மிகவும் சுலபம், ஆனால், கோபத்தின் கை தட்டக்கூடாது. பாப்தாதா இப்பொழுது இதை அடிக்கடி கேட்க விரும்ப வில்லை, ஆனாலும் கருணை வருவதால் கேட்கின்றார்கள். பாபா வாக்குறுதி கொடுத்துவிட்டேன், ஆனால்,..... பிறகு, மீண்டும் வந்துவிட்டது, என்ன செய்வது! விரும்பவில்லை, ஆனால், வந்துவிடு கிறது என்று இப்பொழுதிலிருந்து சொல்லக்கூடாது. நீங்களே மாயாவிற்கு புரிய வைத்துவிடுங்கள், கோபத்திற்கு புரிய வைத்துவிடுங்கள் என்று குழந்தைகள் கூறுகின்றார்கள். இந்த முயற்சியையும் தந்தை செய்ய வேண்டும் மற்றும் பிராப்தியை குழந்தைகள் பெறுவீர்களா? இந்த உழைப்பும் தந்தை செய்ய வேண்டுமா? ஆகையினால், இப்படிப்பட்ட வாக்குறுதி அளிக்க வேண்டாம். பிறகு, 5 மாதங்களுக்குப் பிறகு பார்க்கப்படும். நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் தந்தையிடம் வந்தடைந்துவிடுகிறது. என்ன செய்வது,

ஆகிவிடுகிறது, சூழ்நிலைகள் அப்படி வருகின்றன, விசயம் மிகப் பெரியதாகிவிட்டது அல்லவா - இப்படிப்பட்ட ரிசல்ட் இருக்கக்கூடாது. தந்தைக்கே புரிய வைப்பதற்கு முயற்சி செய்கின்றார்கள், மிகவும் புத்திசாலிகள். பாபா சின்ன பெரிய விசயங்களை நாங்கள் கடந்துவிடுகிறோம், இந்த விசயமே பெரியதாக இருந்தது அல்லவா என்று கூறுகின்றார் கள். இப்பொழுது யார் மீது குற்றம் சுமத்தப் படுகிறது? விசயத்தின் மீது. மேலும், விசயம் என்ன செய்கிறது? வந்தது, சென்றுவிட்டது. 5 ஆயிரம் ஆண்டு களுக்குப் பிறகு மீண்டும் விசயம் வரும். 5 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு எந்த விசயம் வருமோ, அதன் மீது குற்றம் சுமத்திவிடு கின்றீர்கள். இவ்வாறு செய்யக்கூடாது. என்ன செய்வேன்...! இதை சங்கல்பத்திலும் கூட கொண்டு வரக்கூடாது. பாப்தாதா கோபத்திற்காக ஏன் விசேஷமாக கூறிக் கொண்டு இருக்கின்றார்கள்? ஏனென்றால், ஒருவேளை, கோபத்திற்கு நீங்கள் விடைகொடுத்துவிட்டீர்கள் என்றால் இதில் பேராசை, இச்சை ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. பேராசை என்பது பணம் மற்றும் உணவைப் பற்றியது மட்டுமல்ல, விதவிதமானதாக உள்ளது. ஞானத்தினுடைய, அஞ்ஞானத்தினுடைய எந்தவொரு இச்சை இருந்தாலும் இது கூட பேராசை ஆகும். எனவே, கோபத்தை அழிப்பதனால் பேராசை தானாகவே அழிந்துவிடும், அகங்காரமும் தானாகவே அழிந்துவிடும். நான் பெரியவர், நான் புத்திசாலி, இவர் தன்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை நான் அறிவேன் - இதுபோன்று அபிமானம் வருகின்றது அல்லவா, அப்பொழுதே கோபம் வருகிறது. எனவே, அபிமானம் மற்றும் பேராசை இவை இரண்டும் இணைந்தே விடைபெற்றுவிடும். ஆகையினால், பாப்தாதா விசேஷமாக பேராசைக்காக சொல்லாமல், கோபத்திற்கு அடிக்கோடிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். சமஸ்காரத்தை உருவாக்குவீர்களா? இப்பொழுது அனைவரும் கை உயர்த்துங்கள், அனைவரையும் புகைப்படம் எடுங்கள். (அனைவரும் கை உயர்த்தினார்கள்) இப்பொழுது கொஞ்சம் வாழ்த்து கொடுக்கின்றார்கள், அதிகமாக அல்ல, மேலும் பிறகு, எப்பொழுது ரிசல்ட் பார்ப்பார்களோ, பிறகு, வதனத்தினுடைய தேவதைகளும், சொர்க்கத்தினுடைய தேவதை களும் உங்கள் மீது ஆஹா! ஆஹா! என்று புஷ்பங்களை பொழிவார்கள்.

இன்றிலிருந்து ஒவ்வொருவரும் தனக்குள் பார்க்க வேண்டும், பிறரை பார்க்கக் கூடாது. பிறருடைய இந்த விசயங்களைப் பார்ப்பதற்கான மனதினுடைய கண்ணை மூடிவிட வேண்டும். இந்தக் கண்களை மூட முடியாது அல்லவா, ஆனால், மனதின் கண்களை மூடிவிட வேண்டும். இரண்டாமவர் செய்கின்றாரோ அல்லது மூன்றாமவர் செய்கின்றாரோ, நான் பார்க்கக் கூடாது. ஒருவேளை, யாரோ ஒரு மகாரதி கூட அப்பேற்பட்ட பலவீனத்தை வெளிப்படுத்தினாலும் கூட அதை பார்க்கும்பொழுது மற்றும் கேட்கும்பொழுது மனதை உள்நோக்குமுகமாக ஆக்கவேண்டும் என்பதை தந்தை அந்தளவு ஃபோர்ஸ் கொடுத்து கூறுகின்றார். வேடிக்கையான விசயம் சொல்லவா - இன்று பாப்தாதா கொஞ்சம் தெளிவாகக் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள், அது வருத்தமாக இல்லை தானே. நல்லது, இன்னும் ஒரு தெளிவான விசயத்தை சொல்கின்றார்கள். பெரும்பான்மையினர் சில நேரங்களில், எப்பொழுதும் அல்ல, அவ்வப்பொழுது மகாரதிகளின் விசேஷத்தன்மைகளை குறைவாகப் பார்க்கின்றார்கள் மற்றும் பலவீனத்தை மிகவும் ஆழமாகப் பார்க்கின்றார்கள், மற்றும் பின்பற்றுகின்றார்கள் என்பதை பாப்தாதா பார்த்தார்கள். என்ன,

அனைவரையும் பார்த்துவிட்டேன், மகாரதியும் செய்கின்றார்கள், நாமோ பின்னால் தான் இருக்கின்றோம், மகாரதி எப்பொழுது மாறுவார்களோ, அப்பொழுது நானும் மாறிவிடுவேன் என்று ஓரிருவரிடம் வர்ணனையும் செய்கின்றார்கள். ஆனால், மகாரதிகளின் தவம், மகாரதிகளின் நீண்ட கால முயற்சி அவர்களுக்கு கூடுதலான மதிப்பெண்கள் கொடுத்தாவது மதிப்புடன் தேர்ச்சி பெற்றவராக ஆக்கிவிடுகிறது. மகாரதி மாறினால் நான் மாறுவேன் என்று நீங்கள் இவ்வாறு காத்துக்கொண்டு இருந்தீர்கள் என்றால் ஏமாற்றம் அடைவீர்கள். ஆகையினால், மனதை உள்நோக்குமுகமாக ஆக்குங்கள். புரிந்ததா. பார்த்துவிட்டேன் . . . பார்த்துவிட்டேன் என்று கூறுவதையும் பாப்தாதா அதிகமாகக் கேட்கின்றார்கள். எங்களுக்கும் கண்கள் உள்ளன அல்லவா, எங்களுக்கும் காதுகள் உள்ளன அல்லவா, நாங்களும் நிறைய கேட்கின்றோம். ஆனால், மகாரதிகளுடன் இந்த விசயத்தில் போட்டி போடக்கூடாது. நல்லதைப் பார்த்து போட்டி போடுங்கள், தீயதைப் பார்த்து போட்டி போடாதீர்கள், இல்லையென்றால் ஏமாற்றம் அடைந்துவிடுவீர்கள். தந்தைக்குக் கருணை வருகிறது. ஏனெனில், மகாரதிகளுடைய அஸ்திவாரமான நம்பிக்கையானது உறுதியானதாக, நிலையானதாக உள்ளது, அதனுடைய ஆசீர்வாதங்கள் அதிகப்படியாக மகாரதிகளுக்கு கிடைக்கின்றது. ஆகையினால், ஒருபோதும் மனதின் கண்ணை இந்த விசயத்திற் காக திறக்கக் கூடாது. மூடி வைத்துக் கொள்ளுங்கள். கேட்பதற்கு பதிலாக மனதை உள்நோக்கு முகமாக வைத்துக் கொள்ளுங்கள். புரிந்ததா.

நாலாபுறங்களிலும் உள்ள பாப்தாதாவினுடைய அனைத்து லவ்லீன் ஆத்மாக்களுக்கு, தந்தையினுடைய அனைத்து சேவாதாரி ஆத்மாக்களுக்கு, சகஜ புருஷார்த்தத்தை தனதாக்கக் கூடிய அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தந்தைக்கு சமமாக ஆகுவதற்கான இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமமாக ஆக்கக்கூடிய, தந்தைக்கு சமீபமான ஆத்மாக்களுக்கு பாப்தாதா வின் மிக மிக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : அனைவருக்கும் அழிவற்ற ஞானத்தைக் கொடுத்து அகால மரணத்தின் பயத்திலிருந்து விடுவிக்கக் கூடிய சக்திசாலி சேவாதாரி ஆகுக.

உலகத்தில் தற்காலத்தில் அகால மரணத்தின் பயம் தான் இருக்கின்றது. பயத்துடன் சாப்பிட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள், நடந்து கொண்டும் இருக்கின்றார்கள், தூங்கவும் செய்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு மகிழ்ச்சியான விசயத்தைக் கூறி பயத்திலிருந்து விடுவியுங்கள். நாங்கள் உங்களை 21 பிறவி களுக்கு அகால மரணத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்ற நல்ல செய்தியை அவர்களுக்குச் சொல்லுங்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அழிவற்ற ஞானம் கொடுத்து அமரர் (அழிவற்றவர்) ஆக்குங்கள், இதனால் அவர்கள் ஜென்ம ஜென்மத்திற்கு அகால மரணத்திலிருந்து தப்பித்து விடவேண்டும். அவ்வாறு தன்னுடைய சாந்தி மற்றும் சுகத் தினுடைய அதிர்வலைகள் மூலம் உலகத்தினருக்கு மகிழ்ச்சி மற்றும் அமைதியினுடைய அனுபவத்தை செய்விக்கக் கூடிய சக்திசாலி சேவாதாரி ஆகுங்கள்.

சுலோகன்: நினைவு மற்றும் சேவையில் சமநிலை கொண்டிருக்கும்போதே அனைவருடைய ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன.